# அன்னைக்கு ஓர் அஞ்சலி



**சிவபாக்கியம் கதிரவேலு**

**21. 11. 1922 - 25. 05. 2002**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி சிவபாக்கியம் கதிரவேலு நினைவாக

காலம் தன் நியமத்திலிருந்து தவறுவதில்லை.

விதைகள் முளைக்கின்றன. முளைகள் வளருகின்றன. வளர்ந்து பூத்துக் குலுங்குகின்றன. அதன் பின்னர் ஒருங்குகின்றன. விதைகள் பரவுகின்றன.....

உயிர்ச்சுழல் மீண்டும் தொடங்குகிறது.

அந்தத்தொடரும் விதி திருவாட்டி கதிரவேலு சிவபாக்கியம் அவர்களைக் ''காலம் சென்றவர்'' ஆக்கிவிட்டது.

உண்மையில் திருவாட்டி சிவபாக்கியம் ஒரு ''காலம்'' ஆக இருந்தவர். நமது பாரம்பரியப் பண்பாடு நவீனத்தின் அதிர்வுகளை எதிர்கொண்ட காலத்தில் ''வாழ்ந்தவர்''. பூரணமான வாழ்வு. வாழ்க்கையின் நிறைவான வாழ்வு. கணவர் திரு. கதிரவேலு அற்புதமான மனிதர். நல்ல உத்தியோகத்தர் என்பதிலும் பார்க்க ''நாகரீகம்'' மிக்க மனிதராக வாழ்ந்தவர்.

அவர்களின் ''எச்சம்'' தான் டாக்டர் இந்திரகுமார். பெற்றோரின் சிறப்பு, அவர் தம் எச்சத்தால் (பிள்ளைகளால்) தெரியவரும் என்பது திருக்குறள் உண்மை.

அன்பான தாயாக வாழ்ந்தவர். வாழ்ந்து நிறைந்தார்.

இந்த மறைவுகளில் வாழ்க்கையின் பூரணத்துவத்தைக் காணலாம்....

அவர் சிறப்புக்கள் நீண்டகாலம் பேசப்படும்.

கதிரவேலு அவர்களை நினைவு கூர்ந்து சிவபாக்கியம் அவர்கட்கு எனது நன்றிதனைத் தெரிவித்து இந்திரமாருக்கு எனது வாழ்த்துக்களை வழங்குகிறேன்.

பெருமை தரும் பெற்றோர், பெற்றோரின் உண்மையான நிறைவைக் காட்டும் பிள்ளை.

டாக்டர் இந்திரகுமாருக்குத் திருவும் சீரும் பொலிக.

17-06-2002

**கார்த்திகேசு சிவத்தம்பி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னையும்
# ஒரு மகனாகவே
# கருதிய அற்புதத்தாய்

1994இல் என் தாய் திருமதி. மணிமேகலை தமிழ்வாணன் காலமானார். அவர் ஏற்படுத்திய ஓர் வெற்றிடத்தை அந்த தாய் ஸ்தானத்தை அண்மைக்காலம் வரை நிரப்பியவர் டாக்டர் திரு. இந்திரகுமாரின் தாயார் திருமதி. சிவபாக்கியம் கதிரவேலு அவர்கள்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அவர் இந்தியா வந்திருந்தபோது 6 மாதங்கள் சென்னை அண்ணா நகரில் அவர் தங்கி தமிழகத்தின் புனிதத் தலங்களுக்கு பயணம் மேற்கொண்ட போதும் அதன் பின்னும் அவருடன் நெருங்கிப் பழகக்கூடிய, அவர் பாசத்தை முழுமையாக உணரக்கூடிய அற்புதமான வாய்ப்பு அண்ணன் திரு. லேனாவிற்கும், எனக்கும் மற்றும் எங்கள் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் கிடைத்தது. எழுபது வயதைக் கடந்தாலும் எவரையும் சார்ந்திருக்காத அவருடைய பண்பு ஆச்சரியப்படத்தக்கது மட்டுமல்ல பலராலும் பின்பற்றப்படவேண்டிய ஒன்று. என் மனைவி வள்ளியும் அவரும் நெருங்கிய ரத்தச் சொந்தங்களைப் போல் பழகிய விதம் எப்போதுமே மறக்க முடியாத ஒன்று. நிறுத்தி நிதானமாக அழகான கையெழுத்தில் அழகாக கடிதம் எழுதும் இவருடைய பழக்கம் பாராட்டப் படவேண்டியது.

மகன் டாக்டர் திரு. இந்திரகுமாரை இந்திரா என்று தான் செல்லமாகக் குறிப்பிடுவார். “இந்திரா ஆரம்பகாலங்களில் ஆங்கில நூல்களைத்தான் அதிகம் படிப்பார். தமிழ் நூல்களையும் படிக்க வேண்டும் என்று கல்கண்டு இதழைப் படிக்கச் செய்தேன். இதன் காரணமாக உங்கள் தந்தை தமிழ்வாணனின் விசிறியாக ஆகிவிட்டார். 1969 இல் உங்கள் தந்தை கொழும்பு வந்தபோது அவரை நேரில் சந்தித்து புகைப்படம் எடுத்துக் கொள்ளும் அளவிற்கு ரசிகராக மாறிவிட்டார். இதன் தொடர்ச்சியாக தமிழில் பல்வேறு துறைகளில் சிறப்பாக எழுதக்கூடிய துணிச்சலையும் பெற்றார்.” என்று மனமகிழ்ந்து சொல்லியிருக்கிறார்.

16.04.2002 அன்று டாக்டர் திரு. இந்திரகுமாரின் பணமுதலீட்டில் 6 புத்தகங்களை அச்சிட்டு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில், அதன் தலைவர் திரு. கலாசூரி சிவகுருநாதன், தமிழ்மணி, திரு. மானா மக்கீன் ஆகியோரின் உதவியுடன் வெளியீட்டு விழாவை நடத்தினோம். டாக்டர் எழுதிய “புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு ஓர் அறைகூவல்” என்ற நூலை இயக்குனர், நடிகர் திரு. பாண்டியராஜன் வெளியிட இந் நூலின் முதல் பிரதியை திருமதி. கதிரவேலு பெற்றுக் கொண்டார். “ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்!” என்ற திருவள்ளுவரின் வாக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்ப்பிக்கும் வகையில் பெரிதும் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சி தெரிவித்தார். அடுத்த நாள் 17ஆம் தேதி யாழ்ப்பாணம் சென்று டாக்டர் திரு. இந்திரகுமாரின் வீட்டிற்கு உதயன் நாளிதழ் அதிபர் திரு. சரவணபவன் உதவியுடன் சென்று பார்த்து நிறைய புகைப்படங்கள் எடுத்து டாக்டருக்கு இலண்டனுக்குத் தெரியப் படுத்தினேன். "நம் சார்பில் ரவி நம் வீட்டுக்குச் சென்று பார்த்ததில் ரொம்ப சந்தோஷம்" என்று தன் தாயார் சொன்னதாக டாக்டர் என்னிடம் சொன்னபோது எனக்கும் மகிழ்ச்சியாக இருந்தது.

இது மட்டுமல்ல, திரு. பாண்டியராஜனிடம் முதல் பிரதியைப் பெறும் புகைப்படங்கள் கொழும்பில் சில பத்திரிகைகளில் வெளியானதை பார்த்து பூரித்து உடனே அச் செய்தி நறுக்குகளை இலண்டனுக்கு தன் மகனுக்கு அனுப்பி சந்தோஷப்பட்டிருக்கிறார். இந்த இனிமையாக சூழலில் சில நாட்களே கழிந்த நிலையில் சற்றும் எதிர்பாராத விதத்தில் இவர் காலமான செய்தியைக் கேட்டபோது என்னால் நம்பவே முடியவில்லை. உடல் நலக் குறைவில்லை; மருத்துவமனைக்குச் செல்லவில்லை. உயிருக்குப் போராடவில்லை தூக்கத்திலேயே அமைதியாக இவர் உயிர் பிரிந்து விட்டது. என்னை மகனாக பாவித்த அவருக்கு கடைசிக் காலத்தில் இரு பெருமகிழ்ச்சிச் சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுக்க முடிந்தது என் பேறு. இதை எழுதும்போது என் கண்கள் பனிக்கின்றன. இந்த அற்புதமான தாயின் அன்பைப் பெற முடிந்தது என் அதிர்ஷ்டம்.

பொதுவாக என் வெளிநாட்டுப்பயண திட்டத் தேதிகளை மாற்றாத நான் ஏப்ரல் 29க்கு பதிலாக மேலும் இரு தினங்கள் தங்கி டாக்டர் திரு. மற்றும் திருமதி. இந்திரகுமாருடன் இருக்க முடிந்ததும் மே 1 ஆம் தேதி நடைபெற்ற இறுதிச் சடங்கில் என் மனைவியுடன் கலந்து கொண்டதும் மன ஆறுதலை அளித்த விஷயங்கள்.

**ரவி தமிழ்வாணன்**
நிர்வாக இயக்குனர்
மணிமேகலைப் பிரசுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னைப் பெறாத
# ஒரு தாய்க்கு
# ஒரு கண்ணீர் அஞ்சலி

"Hello! could I speak to Mr. Robert please"

"Yes, speaking"

"டாக்டர் இந்திர குமார் அம்மா பேசுறன். உம்மை பத்தி இந்திரகுமார் சொல்லியிருக்கிறார்."

"அப்படியா?"

"உம்மை சந்திக்க வேண்டுமே, எப்போ வசதிப்படும்?"

"சனிக்கிழமை வர்றேன் அம்மா."

"நான் தினமும் காலையில் கோயிலுக்கு போயிட்டு பின்னேரம் மூன்று மணி போல தான் வீட்டுக்கு வருவேன்."

"சரி அம்மா, நான் சனிக்கிழமை அந்திக்கு ஐந்து மணி போல உங்களை வந்து சந்திக்கிறேன்."

இப்படித்தான் தொலைபேசி மூலம் மூன்று ஆண்டுகளுக்கு முன் டாக்டர் இந்திரகுமாரின் தாயார் திருமதி சிவபாக்கியம் கதிரவேலுடன் முதலில் அறிமுகம் ஏற்பட்டது. அதன்பின் அம்மாவுடன் நேரிலும் தொலைபேசி மூலமும் பேசிக் கொள்வேன்.

நாட்டு அரசியல் நிலைமைகள் பற்றி என்னிடம் விசாரிப்பார். நான் தெரிந்தவைகளைச் சொல்வேன் டாக்டர் இந்திரகுமாரைப்பற்றி பத்திரிகைகளில் வரும் செய்திகள், அவரின் புகைப்படங்கள், அவர் வெளியிட்ட நூல்களைப் பற்றி விமர்சனங்கள் பற்றியும் சொல்வேன்.

டாக்டர் இந்திரகுமாருடன் 26 ஆண்டுகளுக்கு மேலாகப் பழகியிருக்கிறேன். அப் பழக்கத்தின் போது நடைபெற்ற சுவாரஸ்யமான சம்பவங்களைச் சொல்வேன். அம்மா மகிழ்ச்சியுடன் கேட்டுக் கொண்டே, "முதலில் இதைச் சாப்பிடும். பிறகு பேசும்" என்று அன்புக் கட்டளை இடுவார். அம்மாவிடம் நல்ல பல குணங்களைக் கண்டிருக்கிறேன். எவரைப் பற்றியும் குறை கூறமாட்டார்.

16. 04. 2002 செவ்வாய்க்கிழமை மாலை வெள்ளவத்தையில் உள்ள தமிழ்ச் சங்கத்தில் மணிமேகலைப் பிரசுரத்தாரின் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் நடைபெற்றது. அந்நிகழ்ச்சிக்கு அம்மாவையும் அழைத்துச் சென்றிருந்தேன். அன்று கலாசூரி ஆர். சிவகுருநாதன் (தினகரன் முன்னாள் பிரதம ஆசிரியர்) தலைமையில் டாக்டர் இந்திரகுமார் வெளியிட்ட -

1. அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களது The Marathon Crusade for Fifty - Fifty (Balanced Representation) in the State Council - 1939
2. இலங்கேஸ்வரன் (நாடகப் பிரதி நூல்)
3. ஆறுமுகநாவலரின் தமிழ் இலக்கணச் சுருக்கம்
4. திருக்கோணேஸ்வரம்தான் தெட்சிண கயிலாயம்
5. யாழ்ப்பாணத்தின் வீரத் தமிழ் மன்னன் இரண்டாம் சங்கிலி (நாடகப் பிரதி நூல்)
6. டாக்டர் இந்திரகுமார் எழுதிய "புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு ஓர் அறைகூவல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய நூல்களின் அறிமுக விழாவும் விற்பனையும் சிறப்பாக நடைபெற்றது.

டாக்டர் எழுதிய நூலின் முதற் பிரதியை நகைச்சுவை நடிகரும் நெறியாளருமான பாண்டியராஜன் டாக்டரின் தாயாரிடம் கொடுத்து, அவரது கால்களைத் தொட்டுக் கும்பிட்டார். அப்படியே ரவி தமிழ்வாணனும் செய்தார்.

விழா முடிந்ததும் அம்மாவை வீட்டில் கொண்டு போய்ச் சேர்த்தேன். அப்போது நேரமாகி விட்டபடியால், "தம்பி! பஸ் கிடைக்காது ஆட்டோவில் போங்கள்" என்று சொல்லிப் பணம் தந்தார்கள். இல்லை அம்மா பஸ் இருக்கு என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன்.

மறுநாள் அம்மாவைச் சந்திக்க சென்றேன். வழக்கத்தைவிட அம்மா சந்தோஷத்தில் இருப்பதாகக் காணப்பட்டார். எனக்கு முறுக்கும், பயிற்றம்மா உருண்டையும் நெஸ்காப்பியும் கொடுத்து விழாவில் பிடித்த வீடியோ கசட்டை டாக்டருக்கு கூரியர் மூலம் அனுப்பி விடும்படிச் சொல்லி, ஒன்பது ஆயிரம் ரூபாய் கொடுத்து, போதுமா என்று கேட்டார். போதும் அம்மா என்றேன். அதன் பின் 8 நாளைக்கு பிறகு 26. 04. 2002 காலை 6 மணியளவில் தொலைபேசியில் லண்டனிலிருந்து டாக்டர் மெதுவாக ஏதோ சொன்னார்.

"விளங்கவில்லை," என்றேன்.

அம்மா இறந்துவிட்டார்கள் என்றார். நான் அழுது கொண்டே பேசினேன். சமையல் அறையில் இருந்த என் மனைவியும் மகளும் நான் அழுவதைப் பார்த்துத் திடுக்கிட்டனர்.

"அழாதீர்கள் றொபட்! நானே துக்கத்தைத் தாங்கிக் கொண்டிருக்கிறேன் அழாதீர்கள்," என்றார்.

அம்மாவின் உடல் ஜயரத்தின மலர்ச்சாலையில் வைக்கப்பட்டிருக்கிறது. இறுதிக் கிரியைகளை அம்மாவின் மைத்துனர் குமரேசன் கவனிக்கிறார். நான் விஜயாவுடன் (திருமதி இந்திரகுமார்) 30ம் திகதி காலையில் வருகிறேன் என்றார். எங்கள் வீட்டுக்கும் வந்துவிட்டுப் போங்கள் என்றேன். எனக்கு எங்கும் வரமுடியாது நான் மூன்று மாதமாக கால் வருத்தத்தில் சரியாக நடக்க முடியாமல் இருக்கிறேன் என்றார்.

"அம்மாவுக்குத் தெரியுமா?"

"நான் சொல்லவேயில்லை. சொல்லியிருந்தால் அவர் வேதனைப் பட்டிருப்பார்."

நானும் ரவி தமிழ்வாணனும் விமான நிலையத்திற்குச் சென்று டாக்டர் இந்திரகுமார் தம்பதிகளை அழைத்து வந்து வெள்ளவத்தையில் அரேதூஷா லேனில் உள்ள 42ம் இலக்க 1ம் மாடி வீட்டில் தங்கவைத்தோம். நானும் டாக்டருக்கு உதவியாக அவருடன் தங்கினேன்.

மே மாதம் 1 ம் திகதி மதியம் அம்மாவின் சடலம் பொரளை கனத்தையில் தகனம் செய்யப்பட்டது.

மறுநாள் இரவு, நானும் டாக்டரும் திரு. குமரேசனும், அம்மா உபயோகித்த பொருட்களைப் பார்வையிட்டோம். (அன்று விஜயா தன் சினேகிதியின் வீட்டில் இருந்தார்) ஒரு சூட்கேஸில் சுமார் 25 சாரிகள் இருந்தன. பல சாரிகள் புதியவை. அவற்றை விஜயாவின் சிநேகிதியின் வீட்டுக்கு அனுப்பினோம். கதிர்காமத்துக்கு போகும் போது அங்குள்ள ஏழைப் பெண்களிடம் கொடுக்கும்படியும் மற்றப் பொருட்களை ஏழைகளுக்கு கொடுக்கும்படியும் கூறி என்னிடம் ஒப்படைத்தார்.

ஒரு சூட்கேசில் இருந்த ஆவணங்களையும் தன் தந்தையினதும் பாட்டியினதும் புகைப்படங்களையும் டாக்டர் எடுத்துக் கொண்டார். அதிலிருந்த தன் தந்தையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாபகார்த்த மலரில் தன் தந்தையைப் பற்றி எழுதிய கட்டுரையை டாக்டர் எனக்கு வாசித்துக் காட்டினார். அழுது கொண்டே வாசித்தார். எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை எப்படி ஆறுதல் கூறுவதென்றே தெரியவில்லை. நான் என் படுக்கை அறைக்குப் போய் படுத்துக் கொண்டேன். வெகு நேரம் கழித்து பார்த்தேன். மின் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. நான் எழுந்து, போய் படுங்க டாக்டர் நேரம் 12.30 ஆகிறது என்றேன்.

சரி என்றார்.

இரவு 2 மணிக்குப் பின் தான் படுக்கைக்குப் போய் இருப்பார் என்று நினைக்கிறேன்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய்," என்றார் வள்ளுவர்.

தனது மகனைச் சான்றோன் என்று கடந்த 30 ஆண்டுகாலமாகப் பலர் வாயிலாகவும் கேட்டவர் தான் இந்த அன்னை; மகிழ்ந்தவர் தான் இந்தத் தாய். ஆனால் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் தனது மகனைச் சான்றோன் எனக் கேட்ட உரை அவரது மனதை மிகவும் தொட்டிருக்க வேண்டும். 19 வருடங்களுக்கு முன்னர் உயிர்நீத்த தனது அன்புக் கணவருக்கு இந்த நல்ல செய்திகளெல்லாம் தெரியுமோ தெரியாது, அதை அவருக்குச் சொல்லி மகிழ வேண்டிய வேளை வந்துவிட்டது, அதை இனியும் தாமதிக்க முடியாது என்ற முடிவுடன் தான் அவர் இந்த உலக வாழ்வை முடித்துக்கொண்டு போய்விட்டார் என்று எண்ணத் தோன்றுகிறது.

தனது அன்னையின் மரணத்தை டாக்டர் இந்திரகுமார் தொலைபேசியின் மூலம் எனக்கு அறிவித்து, வாய்விட்டு அழுத என்னைத் தேற்றி, எனது அழுகையை நிறுத்திய பின்னர், சில வாசகங்களைக் கூறினார். அதைச் சொல்லும் போது தான், அதுவரை அமைதியாக இருந்த அவர் அழுதார்:

"றொபட், நீங்கள் ஒரு திறமையான நாடக இயக்குநர். ஆனால் இதுவரை காலமும் எந்த நாடகப்பிரதியையும் இயக்காத எனது அன்னை, உங்களையும் மிஞ்சிவிட்டார். SHE WROTE HER OWN SCRIPT, SHE WROTE HER OWN CLIMAX, SHE WROTE HER OWN EXIT AND SHE DIRECTED IT WITH SUCH GREAT EASE AND EXPERTISE. அவரது மறைவு, எனது வாழ்க்கையில் ஈடினை செய்யமுடியாத ஒரு பேரிழப்பையும் வேதனையையும் தந்தபோதிலும், அவர் இந்த உலகைவிட்டுப் பிரியாவிடை பெற்ற அந்த அமைதியான, சாந்தமான முறை, எனக்குப் பெரும் மன ஆறுதலைத் தருகிறது. தானே தேர்ந்தெடுத்துக் கொண்ட தனது பிரியாவிடையின் போதும், தனது உயிருக்குயிரான மகனுடைய சோகத்தை எவ்வளவு தூரம் குறைக்க முடியுமோ, அவ்வளவு தூரம் குறைத்துவிட்டும் அவர் போய்விட்டார்."

அம்மா இறந்த போது அவரது வயது 79. என்னை அன்புடனும் பாசத்துடனும் நேசித்த என்னைப் பெறாத, என் அன்புத் தாயுக்கு என் கண்ணீர் அஞ்சலியைத் தவிர, என் பாசத்தைத் தவிர, வேறெதனைத் தான் நான் தர முடியும்?.

**ஜே. பீ. றொபட்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னைக்கு ஓர் அஞ்சலி

கொழும்பிலிருந்து இலண்டனுக்கு வந்த அந்தத் தொலைபேசிச் செய்தி முதலில் பேரிடியாக இருந்தது.

அது எனது அன்னையின் பிரிவுச் செய்தி. மேலும் விபரங்கள் வரத் தொடங்கின. மதிய உணவு சாப்பிட்ட பின்னர், வழக்கம் போல் கலகலப்பாக எல்லோரிடமும் பேசினார். அதன் பின் தனது வழமையான பிற்பகல் உறக்கத்திற்காக, எல்லோரிடமும் சொல்லிவிட்டு தனது படுக்கையறைக்குச் சென்றுவிட்டார். மாலை 5 மணிக்கெல்லாம் உறக்கம் கலைந்து, தேனீர்க் கோப்பையுடன் வெளியே வந்து பேசிக் கொண்டு இருப்பார். என்ன அவரை இன்னும் காணோமே என்று அவரது கதவைத் திறந்து பார்த்தபோதுதான் தனது கட்டிலில் மீளாத் துயிலில், அவர் ஆழ்ந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவரது முகத்தில் பரிபூரண அமைதி.

நோய் நொடி இல்லாமல், வேதனை வலி என்று ஏதுமில்லாமல், தான் நித்தியமும் வணங்கி வந்த இறைவனடி சேர்ந்துவிட்டார், 79 வருடகாலமாக மிக நிறைவான வாழ்வு வாழ்ந்த என் அன்னை.

பேரிடியின் அதிர்ச்சி மறைந்து, சாந்தியுடன் கூடிய ஒரு பிரிவுத் துயர் என்னை ஆட்கொண்டது.

எனது அன்னை இறப்பதற்கு நான்கு நாட்கள் முன்னர்தான் இலண்டனிலிருந்து அவருடன் தொலைபேசி மூலம் 15 நிமிட நேரம் பேசியிருந்தேன். அதற்கு முந்திய இரு வாரங்களின் போது பத்துத் தடவைகளாவது அவருடன் தொலைபேசியில் பேசியிருப்பேன்.

காரணம் -- எனது நண்பர்கள் ரவி தமிழ்வாணனும் றொபட்டும் தமது இரங்கலுரைகளில் குறிப்பிட்டுள்ள எனது நூல்களின் வெளியீட்டு விழா அக்காலகட்டத்தில்தான் கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் எனது நண்பர் இ. சிவகுருநாதன் தலைமையில் நடைபெற்றது.

அந்த விழாவிற்கு நான் வரவேண்டும் என்று பலர் கேட்டுக் கொண்ட போது, அதைப் பற்றி எனது அன்னையிடம் தொலைபேசி வழியாக கருத்து கேட்டபோது என்னை வரவேண்டாம் என்று ஆலோசனை சொன்னவர் அவரே. என்னதான் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்த போதிலும், வெளிநாட்டிலிருந்து வரும் தமிழனுக்கும் அவனது சுயேச்சையான அரசியல் கருத்துகளுக்கும் கொழும்பில் தங்குதடையற்ற பாதுகாப்பு உள்ளது என்று தான் கருதவில்லை என்றார். ஆனால் முடிவை என் கையில் விட்டு விட்டார். அது அவருக்கே இயல்பான ஜனநாயகப் பண்பு.

நான் வரவில்லை.

ஆனால் -- அந்த விழாவில் ஒரு பார்வையாளராக அம்மாவைக் கலந்துகொள்ளும்படி நான் வேண்டிக் கொண்டேன். அவரும் மகிழ்வுடன் சென்றார். அந்த விழாவில் அம்மாவை ஒரு வி. ஐ. பி யாக மாற்றிவிட்டனர் ரவியும் சிவகுருநாதனும், அது அவருக்கு ஒரு ஆனந்த அதிர்ச்சி!

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" (குறள்-69)

வள்ளுவரின் இந்தக் குறளை நண்பர் சிவகுருநாதன் எனக்குப் பலமுறை சொல்லிவிட்டார், இலண்டனிலிருந்து அவருடன் நான் தொலைபேசியில் பேசிய போதும், கொழும்பில் அன்னையின் இறுதிச் சடங்குகளில் நான் கலந்துகொண்டபோதும். எம்மைவிட்டு அவர் பிரிவதற்கு முதல் வாரத்தில் அவரது மனநிலை அப்படித்தான் இருந்ததாம். அந்தக் காலகட்டத்தில் அவருடன் மிகநெருங்கிப் பழகிய நண்பர்கள் றொபட்டும், ரவி தமிழ்வாணனும் கூட இதைத்தான் சொன்னார்கள். இதே குறளைத் தான் சொன்னார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மனதில் வியாபித்து நின்ற பெரும் பிரிவுத்துயரை, இந்த உரைகள் ஓரளவு தணித்தன.

எனக்கு மிகவும் பிடித்த வள்ளுவரின் இன்னொரு குறள் எனது மனதில் மேலோங்கி நிற்கிறது. "தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து முந்தி யிருப்பச் செயல்". (குறள் -67)

தந்தை என்று வள்ளுவர் குறிப்பிடுவதை, தந்தை - தாய் என்ற இருவரையும் சேர்த்தே உரை நல்கப்பட்டு வருகிறது.

அந்த வழியில், எனது பெற்றோர் ஆற்றிய உன்னதமான பணி எனது மனதில் என்றும் நிறைந்து நிற்கிறது. எனக்கு அறிவை ஊட்டி, நன்நெறியைக் காட்டிய எனது தந்தையின் பணி உன்னதமானது. அவற்றைச் செயற்படுத்த நான் உழைத்தபோதெல்லாம், எனக்குப் பின் தூங்கி, எனக்கு முன் விழித்து, கண் இமை மூடாமல் இரவைப் பகலாக்கிக் கொண்ட என் அன்னையின் தியாகத்தைப் பற்றிய பசுமையான நினைவுகள் என்னை முற்றுமுழுதாக ஆக்கிரமிக்கின்றன.

நான் எனது பெற்றோருக்கு ஒரே ஒரு பிள்ளை. தந்தை இறந்துவிட்டார்; வயதான தாய்; தனது பிள்ளையிடம் "இதைக் கொண்டு வா", "அதைத் தா", என்றெல்லாம் கேட்கக் கூடிய உரிமை உண்டு. அப்படியெல்லாம் கேட்காத ஒரு உன்னதப் பிறவி எனது அன்னை. தனது காலில் நின்றார். மனநிறைவோடு நின்றார்; "வீணாகப் பணத்தைச் செலவு செய்யாதே" என்று என்னைக் கட்டுப்படுத்துவார்; பகட்டும் படாடோபமும் அவருக்கு அப்பாற்பட்டவை.

எனது அன்னையினுடைய இந்த சுதந்திரப் பண்பினை எனது நண்பர் ரவி அவதானித்து விட்டு, அதை அனைவரும் பின்பற்றவேண்டிய ஒரு பண்பு என்று விதந்துரைத்தது எனக்கு மிகுந்த பெருமையைத் தருகிறது. என்னுடைய அன்னையின் மைத்துனரான திரு. சி. குமரேசனைப் பற்றி நான் இந்த நேரத்தில் வாஞ்சையுடன் நினைவு கூருகிறேன். சமீபத்தில் ரவி தமிழ்வாணன் இலங்கை சென்றபோது, அவர் அவசியம் சந்திக்கவேண்டியவர்களின் பட்டியலில் குமரேசன் மாமாவின் பெயரையும் குறிப்பிட்டு, அவர் எனக்கு "A Friend, Philosopher and Guide" என்று எழுதியிருந்தேன். அது மட்டுமல்ல கொழும்பில் இருந்த என் அன்னைக்கு ஒரு பாதுகாவல் அரணாக அவர் விளங்கினார் என்றால் அது மிகையாகாது அப்படித்தான் விளங்கினார், எனது தந்தையின் மைத்துனரும், நினைவில் "வானொலி மாமா" வாக என்றும் நிலவும் திரு. சரவணமுத்து அவர்களும் இந்தத் தள்ளாத வயதிலும், அவர் நான் வெளியிட்டு வைத்த அமரர் ஜி. ஜி. யின் சட்டசபைப் பேருரை ஆங்கில நூலை எனக்காகத் தமிழில் மொழிபெயர்த்து வருகிறார். நான் பெருமைப்படுகிறேன்.

என் மனதிலே நிறைந்து நிற்கின்ற ஒரு பேராசையை வெளிப்படுத்தி, என் அன்னைக்கு நான் செலுத்தும் அஞ்சலியை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

மறுபிறப்பு என்ற சக்கரத்தில், எனக்கும் என் தந்தைக்கும், என் அன்னைக்கும் இன்னும் பிறப்புக்கள் மீதமாக இருந்தால் தந்தை, தாய், மகனாக நாம் மீண்டும் ஒன்று சேர, எல்லாம் வல்ல இறைவனின் அருளைக் கோருகின்றேன்.

**க. இந்திரகுமார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னைக்கு ஓர் அஞ்சலி



**சிவபாக்கியம் கதிரவேலு**

**21. 11. 1922 - 25. 05. 2002**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணிமேகலை பிரசுர புத்தக கண்காட்சியை டாக்டர் இந்திரகுமாரின் தாயார் திருமதி. சிவபாக்கியம் கதிர்வேலு குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார். அருகில் கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவரும் முன்னாள தினகரன் பிரதம ஆசிரியருமான கலாசூரி ஆர். சிவகுருநாதன், கலாபூஷணம் ஜே. பீ. றொபட் தமிழ்ச் சங்க பொருளாளர் திரு. ரி. கணேசராஜா ஆகியோர்.



டாக்டர் இந்திரகுமாரின் அனுசரணையுடன் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற மணிமேகலை பிரசுர புத்தகக் கண்காட்சியில் தமிழ் வாழ்த்துப் பாடலின் போது எடுக்கப்பட்ட படம். படத்தில் ரவி தமிழ்வாணன், டாக்டர் இந்திரகுமாரின் தாயார், திருமதி. மானா மக்கீன் தமிழ்ச் சங்க உபதலைவர்
திரு. வி. ஏ. திருஞானசுந்தரம், ஆகியோருடன், கண்காட்சியில் கலந்து கொண்டவர்கள்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணிமேகலை பிரசுர புத்தக விற்பனையும் கண்காட்சியும் நிகழ்வில் நடிகரும் டைரக்டருமான திரு. பாண்டியராஜனிடமிருந்து டாக்டர் இந்திரகுமாரின் தாயார் திருமதி. சிவபாக்கியம் கதிரவேலு தன் மகன் எழுதிய "புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு ஓர் அறைகூவல்" என்ற நூலை பெற்றுக்கொள்கிறார். அருகில் கலாசூரி சிவகுருநாதன், "வீரகேசரி" செய்தி ஆசிரியர் திரு. எஸ். வன்னியகுலம், "மணிப்புலவர்" மருதூர் ஏ. மஜீத் ஆகியோர்.

---

## டாக்டர் க. இந்திரகுமார்.




அன்று



இன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி. சிவபாக்கியம் கதிரவேலு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிதாவிற்கு ஓர் அஞ்சலி
(மறு பதிப்பு)



**அமரர் பொன்னையா கதிரவேலு**
**18. 04. 1916 - 28. 07. 1983**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொ. கதிரவேலு - சில வாழ்க்கைக் குறிப்புகள்

ஈழத்தில் தென்மராட்சி என்று வழங்கும் விவசாயப் பிரதேசத்தில், சாவக்கச்சேரி எனும் கிராமத்தில் வினாசித்தம்பி பொன்னையா மோகனம்மா (அல்லது அன்னப்பிள்ளை) தம்பதிகளின் இளைய மகனாக 18-04-1916ல் கதிரவேலு தோன்றினார். செல்லம்மா, செல்லையா, ஆச்சிமுத்து, பேரம்பலம் ஆகியோர் இவருக்கு மூத்தவர்கள்.

பால் மணம் மாறாப் பச்சிளம் பருவத்தில் கதிரவேலு தன் அன்னையைப் பறிகொடுத்தார். அதன்பின், அன்னைக்கு அன்னையாகவும் தந்தைக்குத் தந்தையாகவும் நின்று அவரை வளர்த்தது அவரது தந்தையே.

தனது அத்தனை பிள்ளைகளிலும் புத்தி சாதுர்யமும் கல்வியில் அதிக ஆர்வமும் காட்டியது கதிரவேலு தான் என்பதை தந்தையார் உணர்ந்திருந்தார். "தம்பி நல்லாய்ப் படிப்பான். அவனைப் படிக்க வைக்க வேண்டும்," என்று அடிக்கடி சொல்லி வருவார். ஆனால், கொடிய காலன் அவரையும் விட்டு வைக்கவில்லை. கதிரவேலுவின் பள்ளிப் படிப்பு முடிவதற்கிடையிலேயே தந்தை பொன்னையாவும் மறைந்தார். தனது இறுதிச் சுகவீனத்தின் போதும் தனயனின் கல்வியே தந்தையின் ஏக்கமாக இருந்தது.

மலர்கள் தூவிய பாதையாக அதுவரை இருந்த கல்வி வசதிகள் கல்லும் முள்ளும் நிறைந்த பாதையாக மாறின. கலங்காத கதிரவேலு கஷ்டப்பட்டு எதிர் நீச்சல் அடித்தார். கல்வி தொடர்ந்தது.

இக் காலகட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்களுக்கென உத்தியோகபூர்வமான ஒரு சஞ்சிகையை, அதன் முதலாவது ஆசிரியராக விருந்து, கருத்தரித்து, பிரசவித்து, அந்த ஏட்டிற்கு "இந்து இளைஞன்" (The Young Hindu) எனப் பெயரும் சூட்டினார். ஜீலை 1937 முதல் ஆகஸ்ட் 1939 வரை, (அதாவது, கல்லூரியை விட்டு விலகும் காலம் வரை) இடையே ஆறுமாத காலம் மட்டும் தவிர்த்து, அதன் ஆசிரியராக மாணவர்களால் தொடர்ச்சியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சிறந்த மாணவர்களில் ஒருவராக, இலண்டன் பல்கலைக் கழகம் நடத்திய மற்றிக்குலேஷன் பரீட்சையில், ஆங்கிலம், இரசாயனம், கணிதவியல், புவியியல், தமிழ் ஆகிய பாடங்களுக்கு ஜீன் 1939ல் தோன்றி, சிறப்புச் சித்தி அடைந்தார். தனக்குக் கொழுகொம்பாக விளங்கிய தந்தையின் பொருளாதாரத் துணை இல்லாமல் போகவே, பல்கலைக்கழகம் சென்று படிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைகளைப் பகற்கனவென மறந்து, சுகாதாரப் பரிசோதகர் பயிற்சிக்குச் சென்று, பயிற்சி இறுதிக் காலத்தில் றோயல் சனிற்றறி இன்ஸ்டிடியூட் (Royal Sanitary Institute) நடத்தும் பரீட்சையில் 24-03-1941ல் சித்தி எய்தினார்.

இதைத் தொடர்ந்து, அரசாங்க சேவையில் சுகாதாரப் பரிசோதகராகப் பணியாற்றத் தொடங்கினார்.

வண்ணார்பண்ணை சரவணமுத்து கார்த்திகேசு - தங்கம்மா தம்பதியரின் மகளான சிவபாக்கியத்தை 1942ல் இல்லத்தரசியாக வரித்து,

"மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கல நன்மக்கட் பேறு."

என்ற வள்ளுவர் வாக்கிற்கமைய இல்வாழ்க்கையை இனிதே நடத்தினார். இவர்களுக்குப் பிறந்த ஆண் மகவிற்கு இந்திரகுமார் என்று பெயரிட்டு கண்ணும் கருத்துமாக வளர்த்தனர்.

உடுவில், பண்டாரகம, மாவத்தகம, குருநாகல், கொழும்பு, தெல்லிப்பழை போன்ற இடங்களில் தமது பணிமுதல்வர்களாய் இருந்த சுகாதார மருத்துவ அதிகாரிகளும் அவ்வக் கிராம மக்களும் மெச்சிப்போற்ற, கதிரவேலு சேவையாற்றினார். குருநாகலில் இவர் சேவையாற்றிய காலத்தில், அவருக்கு வாய்ப்பளிக்கப்பட்ட வெளிநாட்டில் இருவருட சேவையும் மேற்படிப்புக்குமான புலமைப் பரிசிலை, தனது மகனின் கல்விக்கு நேரடி வழிகாட்டியாக தான் இருப்பதே தனது முதன்மையான அபிலாஷை என்று காரணம் காட்டி அதனை நிராகரித்தார். தனது மனதில் என்றோ அவிழ்ந்துவிட்ட உயர் கல்வி ஆசைகளுக்கு புனர்ஜென்மம் கொடுப்பதை விட, தனது மகனை அந்த ஆசைகளின், அந்த இலட்சியங்களின் மொத்த வடிவமாக வளர்த்தெடுப்பதையே அவர் விரும்பினார். இறுதியில் கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தில் ஐந்து வருடங்களும், கொழும்பு தெற்கு அரசினர் ஆஸ்பத்திரியில் ஏழு வருடங்களும் கடமையாற்றிய பின், 1974ல் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

கதிரவேலு என்றுமே மது அருந்தியதில்லை. புகை பிடித்ததில்லை.

1982ன் பிற்பகுதியிலிருந்து சுகவீனம் உற்றிருந்தார். இரு தடவைகள் அறுவைச் சிகிச்சைக்கு உள்ளானார். 1983 ஜீலை 25, அதிகாலை அரை மயக்க நிலையினுள் பிரவேசித்து, ஜீலை 28ம் திகதி மாலை, மனைவியும் மகனும் அருகிலிருக்க, இயற்கை எய்தினார். அமைதியை விரும்பிய அமைதியான வாழ்வு வாழ்ந்த கதிரவேலு, ஜீலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 முதல் நாட்டில் கட்டவிழ்த்து விடப்பட்ட மிலேச்சச் செயல்களை, கண்ணால் காணக்கூடாது என்றதாலோ என்னவோ, அமைதியான துயிலில் தன்னை ஆழ்த்திக் கொண்டார்.

ஈழத்துப் பிரஜைகளின் பரம்பரையில் வந்த கதிரவேலு பிரித்தானிய பிரஜையாகப் பிறந்தார். இலங்கைப் பிரஜையாக வாழ்ந்தார். ஸ்ரீ லங்கா பிரஜையாக மறைந்தார்.

பிறந்தது தமிழ் மண்ணில், அக்கினியோடு கலக்க நேர்ந்தது சிங்கள மண்ணில்.

அவர் பிறந்தபோது, பூவுலகில் அவரைக் களிப்புடன் வரவேற்றவர்கள் சாதாரணத் தமிழ் மக்கள்.

அவரது இறுதிச் சுகவீனத்தின்போது, அவரது உயிரை மீட்க தம் முழு ஆற்றலுடன் போராடியவர்கள் (இரத்த தானமும் செய்தார். ஒரு சிங்களப் பெண் டாக்டர் ! ) சிங்கள - தமிழ் - முஸ்லீம் புத்திஜீவிகள்.

அவரது இறுதிப் பயணம் சிங்கள மண்ணில் இடம்பெற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டபோது, அப் பயணம் உடன் சென்றோருக்கும் இறுதிப் பயணமாக அமைந்திருக்கக் கூடிய, "பேய் அரசு புரிந்த" வேளைகளின்போது, தம்முயிரைத் துச்சமென மதித்து, இறுதிப் பயணத்தை மதக்கோட்பாடு சார்ந்த இறுதிக் கிரியைகளை, அக்கினிச் சங்கமத்தை, சர்வதேசிய உணர்வுடன், வீர வணக்கம் செய்து நிறைவேற்றியவர்கள் சிங்களத் தோழர்கள்.

சமூகரீதியில் இவை எதனைச் சுட்டி நிற்கின்றன ?

❄ ❄.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலிப்போம்

அடக்கம், அன்புள்ளம், பிறர்க்குதவப் பேரார்வம் உடையவர்

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ்வுலகு"

அமரர் திரு. கதிரவேலு அவர்கள் ஆண்டுகள் பலவாக எனக்குத் தெரிந்தவர். அடக்கமும், அன்புள்ளமும் படைத்த பண்பாளர். புன்முறுவலோடு பேசும் கனிவான உள்ளம் படைத்தவர். மற்றவர்களுக்கு உதவுவதற்கோர் அலாதியான பிரியம் படைத்தவர். இன்று அவர் எம்மைவிட்டுப் பிரிந்து வானுலகம் புகுந்துவிட்டார். அவருக்காகவே வாழ்ந்த அவர் பத்தினியும் அருமை மகனாரும் கண்ணீர் வடித்துக் கதறவும், நண்பர்கள் நடுக்கமுறவும் சுற்றத்தவர் புலம்பவும் பெரியார் அவர்கள் மீளாத யாத்திரையை மேற்கொண்டுவிட்டார். அவர் துர்க்கை அம்பாளுடைய அடித்தொண்டர். துர்க்காதேவியின் திருவருள் முன் வைத்தே எல்லாக் கருமங்களையும் ஆற்றுபவர் இவருடைய பாரியார் பக்தியின் பாலராக விளங்குபவர். விரத நியமமும் கடமை உணர்வும் மிக்கவர். இவர்களுடைய திருமகனார் ஒரு பெருங் கலைஞர். அத்துடன் நிறைந்த அறிவு வளம் படைத்தவர்.

"நெருக்கடியின் மத்தியிலேதான் ஞானம் பிறக்கும்" என்பர். அந்த நெருக்கடி நிலை அமரர் அவர்களின் இறுதி நேரத்தில் நாட்டிலே ஏற்பட்டது. எனினும் அமைதியான மரணத்தைத் தழுவிக்கொண்டார். இவ்வுலக வாழ்வு அநித்தியமானது. எமது யாக்கை அநித்தியமானது. அமரர் திரு. கதிரவேலு அவர்களின் மரணம் எம்முள்ளத்தைப் பெரிதும் வருத்தியதெனினும் என்ன செய்வோம். இதுதான் நிச்சயம் என்பது எல்லாரும் அறிந்ததே. ஆகவே, அமரரின் மனைவி மகன் யாவருக்கும் எனது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்து அமரர்க்கும் அஞ்சலி கூறி அமைகிறேன்.

சிவத்தமிழ்ச்செல்வி, துர்க்கா துரந்தரி,
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J.P.

தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றின் மௌனச் சாட்சிகள்

(திரு. பொ. கதிரவேலுவின் மறைவு
வழியாக வந்த ஒரு மனக் கிளறல்)

மனித உறவிலே தான் மானுடத்தின் சாரத்தைக் காணலாமென்பது மெய்யியல் தெளிவுகளில் ஒன்று. இதனால் தான் தெய்வத்தை விளங்குவதற்கும் மானுட உறவு அத்தியாவசியமாயிற்று. உறவின் "இருப்பு நிலை" தான் சமூகம். மனிதனின் மறைவு இந்த அடிப்படை மனித இருப்பு நிலைகளை அறிந்துகொள்ள உதவுகின்றது. ஓர் உறவின் நிறுத்தத்தில் மனித உறவு பற்றியும் மனிதன் பற்றியும் சிந்திக்கின்றோம். யந்திர ஓட்டத்தின் இடைநிறுத்தத்தில் ஏற்படும் உரத்த மௌனத்தின் ஓலத்தில் அந்த உறவு பற்றி சில உண்மைகள் புலனாகின்றன. அந்த உறவு நிறுத்தம் பௌதீகமாகவும் ஆத்மார்த்தமாகவும் ஏற்கப்பட்டுத் தொடர்ந்து "வாழ்க்கை" நடத்தப்பெறும் பொழுது- சமூக யந்திரம் ஓடத் தொடங்கும் பொழுது, உறவின் அசைவியக்கம் பற்றியுமே நமது சிரத்தை தொழிற்படுகிறது. அந்த ஓட்டத்திலும், ஓட்டத்தின் வேகத்திலும் மனித உறவு என்பது "ஆராயப்படாத தரவாக" (Taken for Granted) அமைந்து விடுகிறது. அடுத்த உறவு நிறுத்தம் வரை அது பற்றி பிரக்ஞை அதிகம் இருப்பதில்லை.

மரணம் ஏற்படுத்தும் இழப்பு மனித உறவு நிலையிலே உணரப்படுவதே.

இதனாலே தான் ஒவ்வொரு மனிதனின் மறைவும் மொத்த மனித பலத்தை ஏதோ ஒரு வகையிலே குறைப்பதாக அமைந்து விடுகின்றது.

திரு. கதிரவேலுவின் மறைவு காரணமாக - அவருடனிருந்த உறவின் நிறுத்தம் காரணமாக - ஏற்பட்டுள்ள சில மனிதாயத இழப்புகளை உணருபவர்களில் நானும் ஒருவன். திரு. கதிரவேலு எனது தந்தையாரின் நண்பன். என்னைச் சிவத்தம்பியாக மாத்திரம் அறிந்து கொண்டவரல்ல. த. பொ. கார்த்திகேசுவின் மகனாக, அவர் பாஷையில் "பண்டிதர் கார்த்திகேசுவின் மூத்த மகனாக" அறிந்திருந்தவர்.

தந்தையார் மறைவின் பின்னர் அவரது நினைவுகள் ஒவ்வொன்றையுமே திவ்வியமாகக் காண்பது "மகவு மனத்தியல்பு" எனலாம். திரு. கதிரவேலு அவர்களின் மறைவு, என்னை அந்த இளமைக் காலத்துப் பசுமைகளிலிருந்து மேலும் மேலும் தூரப்படுத்துகின்றது. முதிர்வின் தவிர்க்கப்பட முடியாத கொடுமைகளிலொன்று இது. திரு. கதிரவேலு அவர்களின் நினைவுக்கு நான் செலுத்தும் அஞ்சலியில் எனது தகப்பனாரைக் காண்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஒரு தனிப்பட்ட உணர்வு. இந்த உணர்வின் சமூகக் களத்தை நோக்கினால், இந்த உணர்வுகளும், நமது வரலாற்றின் (இலங்கைத் தமிழர்களின் வரலாற்றின்) "மைல்கற்கள்" சிலவற்றை சுட்டி உணர்த்துவதையும் அறியலாம்.

திரு. கதிரவேலுவும் எனது தகப்பனாரும், யாழ்ப்பாணத்தில் ஒருவரையொருவர் அறியாதவர்கள். இருவருமே இருவேறு பின்னணியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் சந்தித்தது ஒருவரை "ஒருவர்" "அறிந்து" கொண்டதும் "வெளியூரில்" உத்தியோகததுக்காக வெளியூர் சென்றிருந்த இரண்டு தமிழர்கள், உத்தியோகம் செய்யும் ஊரில் "தமிழர்கள்" "யாழ்ப்பாணத்தவர்கள்" என உறவு ஏற்படுத்திக் கொண்டவர்கள். இரண்டு நடுநிலை அரசாங்க ஊழியர்கள். இவர் அப்பொழுது சுகாதாரப் பரிசோதகர், எனது தந்தையார் தலைமையாசிரியர். தாம் கடமையாற்றிய சிறு கிராமத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் படாடோபமின்றி உழைத்த "மௌன ஊழியர்கள்" அச் சேவையிலேயே வாழ்க்கையின் அர்த்தங்களைக் கண்டு கொண்டவர்கள். ஒவ்வொரு கிராமத்துச் சேவையினிறுதியிலும் கிடைத்த பிரிவுபசாரப் பத்திரத்தைத் தவிர மேலதிகமாக எதையும் சம்பாதித்துக் கொள்ளாதவர்கள். அத்தகைய மேலதிக உடைமைகள் இல்லாததாலோ என்னவோ எப்பொழுதும் "தம் பொருள் என்பதம் மக்கள்" என்று வாழ்ந்தவர்கள்.

இத்தகைய மனிதர்கள் தான், தமிழ், இலங்கைக்கு ஆற்றிய தொண்டுகளில் ஒன்றாக மிளிர்ந்தவர்கள்.

திரு. கதிரவேலு அவர்களின் மறைவு, அரசாங்க உத்தியோகத்தைத் தேவ ஊழியமாகக் கருதி அதனை பக்தி சிரத்தையுடன் ஆற்றிய நடுநிலை ஊழியர்களின் தன்னலமற்ற சேவை வரலாற்றை நினைவுறுத்துகின்றது.

திரு. கதிரவேலு வாக்குச் சாதுரியம் மிக்கவர். அவர் சிரிக்காமற் கூறுபவை நினைத்து நினைத்துச் சிரிக்கத்தக்கவை. மிதித்த புல் நோகாத மெல்லியல்பினர் அன்பு நெஞ்சினர்.

தனது மகனைத் தனது சந்ததியின் விளக்காக மாத்திரமல்லாது தனது இலட்சியமாகவே கொண்டிருந்தவர்.

திருமதி கதிரவேலு அவர்கட்கும், டாக்டர் இந்திரகுமாருக்கும் எனது மனம் நெகிழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றேன்.

நடராஜ கோட்டம்,
வல்வெட்டித்துறை.
22-8-1983

**கார்த்திகேசு சிவத்தம்பி**
(தமிழ்த்துறைப் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கல்லூரிச் சஞ்சிகையின் சிற்பி

"மகன் தந்தைக் காற்றுமுதவி யிவன் தந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்"

நண்பன் பொ. கதிரவேலு மறைந்துவிட்டாரென்ற செய்தியை அவருடைய அருமை மகன் டாக்டர் க. இந்திரகுமார் என்னிடம் கூறியபோது, அதிர்ச்சியடைந்த எனக்கு தமிழ் முனிவரின் இந்தக் குறளே தென்பூட்டியூது.

யாழ் இந்துக் கல்லூரியிலே உயர்தர மருத்துவப்பிரிவு மாணவனாக இருக்கும்போதே மகன் தகப்பனுடைய சாயலிலே வளர்ந்து வந்ததை நான் கண்டுகொண்டேன்.

நான் உப அதிபராக நியமிக்கப்பட்ட வருடம் (1962) எங்கள் கல்லூரிச் சஞ்சிகையின் வெள்ளிவிழா கொண்டாடப்பட்டது. அதன் சிற்பி (இன்று அமரர்) பொ. கதிரவேலு என்று எல்லோரும் அறிந்தனர். அவருடைய படம், ஆசிச் செய்தி, சிறு கட்டுரை ஆகியன அச் சிறப்பிதழில் இடம்பெற்றன. அவரின் அரிய பணியை எல்லோரும் மெச்சினர்.

பெரிய கல்லூரிகள் பலவற்றில் கல்லூரி சஞ்சிகை பொதுவாக அதிபர்கள், சிரேஷ்ட ஆசிரியர்கள் முயற்சியால் உதயமாகும். எங்கள் கல்லூரியில் "இந்து இளைஞன்" என்ற நாமத்தை தானே சூட்டி அதன் வெள்ளோட்டத்தில் நம்பிக்கையில்லாத மேல்மட்ட அதிபர், ஆசிரியர்களுக்கு உறுதிகூறி, பல தடைகளைச் சமாளித்து, வெற்றிகண்ட வீரன் நண்பன் கதிரவேலு. அவரின் தனித்துவ ஆற்றல் என்னே!

இவ்வகைத் துணிவும் மனச்செறிவும் இருந்தபோதும் மிகச் சாந்தமான இந்துக்களுக்குச் சொந்தமான 'Mild Manner' அவருடைய சிறப்பான பண்பென்பது அவரை அறிந்தவர் எவரும் அறிவர்.

"எவ்வளவு தூரம் பின்னுக்குப் பார்க்கும் ஆற்றல் ஒருவருக்குள்ளதோ, அவ்வளவு தூரம் நாம் முன்னேறும் பாதை புலப்படும்" என்றார் வின்ஸ்டன் சேர்ச்சில்.

நல்லைநகர் ஆறுமுக நாவலரின் உள்ளத்தில் உதயமான யாழ் இந்துக் கல்லூரியின் வீரக்கதை எழுதப்படும்போது, முன்னும் பின்னும் பார்க்கும் அவசியம் ஏற்படும். அதற்குறுதுணையாய் நிற்பதே அமரர் நிறுவிய "இந்து இளைஞன்" என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1965ல் கல்லூரியின் 75 வது ஆண்டு விழாவில் ஒரு பிரமாண்டமான சஞ்சிகைச் சிறப்பிதழ் வெளிவந்தது. அதற்குரிய அரிய தவறற்ற விவரங்கள் பெரும்பாலும் பழைய "இந்து இளைஞன்" பிரதிகளிலேயே எடுக்கப்பட்டன.

தமிழர்களின் தலைநிகர் கழகமென்று எங்கள் கல்லூரியில் பெருமையடையும் எல்லோருக்கும் அதன் சிறந்த அங்கம் ஒன்றை உருவாக்கிய பெருமகனின் மறைவு ஒரு பேரிழப்பாகும்.

இருப்பினும் அவருடைய நாமத்துக்கமைய அவர் ஸ்தாபித்த "இந்து இளைஞன்" என்றும் இளமையுடனும் அழகுடனும் பொலிந்து துலங்குவானென்ற நம்பிக்கையில் அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக !

110, அம்பலவாணர் வீதி,
யாழ்ப்பாணம்.

ந. சபாரத்தினம்
யாழ் இந்துக் கல்லூரி
முன்னாள் அதிபர்
ஈழநாடு பிரதம ஆசிரியர்.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிரவேலுவின் தியாகங்களின் விஸ்வரூபத்தை நாம் காண்போம்

**(ஒரு மேலதிகாரியின் நம்பிக்கை)**

திரு. பொ. கதிரவேலு அவர்களின் மறைவு என்னை ஆளாத் துயரில் ஆழ்த்திவிட்டது.

1960ல் நான் தெல்லிப்பழைக்கு சுகாதார வைத்திய அதிகாரியாக வந்தபோது, எனக்கு திரு. கதிரவேலுவின் சந்திப்பு கிடைத்தது. அவர் அப்பிரிவின் சுகாதாரப் பரிசோதகராகக் கடமையாற்றிக்கொண்டிருந்தார்.

திரு. கதிரவேலு அன்பும் அடக்கமும் உடையவர். அமைதியான போக்குடையவர். கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு கொண்டவர். பக்தி சிரத்தையுடன் தனது தொழிலைச் செய்தவர். பொறுப்புணர்ச்சி உடையவர். எந்தப் பொறுப்பையும் ஏற்றால், இரவு பகலாக உழைத்து, அதை மிகச் சிறப்பாக நிறைவேற்றக்கூடியவர். என்றுமே "சம்திங்" வாங்காத உத்தமர்.

திரு. கதிரவேலு போன்ற ஒரு சுகாதாரப் பரிசோதகர் எனக்குக் கிடைத்ததால் எனது பணிகள், பொறுப்புக்கள் மிகவும் குறைந்தன.

திரு. கதிரவேலுவின் அயராத உழைப்பினால் இலங்கையின் வரைபடத்தில் தெல்லிப்பழைக் கிராமத்துக்கு ஒரு உன்னத இடம் கிடைத்தது. 1958ல் நடைபெற்ற அகில இலங்கை சுகாதார வாரக் கொண்டாட்டங்களின்போது, தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியின் பிரிவில் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளே முழு இலங்கையிலும் சிறப்பானவை என்று அன்றைய துணைச் சுகாதார அதிபர் (பொதுச் சுகாதாரப் பிரிவு) டாக்டர் ஹேரத் குணரட்னா தீர்மானித்து முதலிடம் வழங்கினார். டாக்டர் ஹேரத் குணரட்னா தெல்லிப்பழைக்கு வந்து, அப் பிரிவுக்கு "மைக்கல் குணரட்னா போட்டிக் கேடயத்தை" வழங்கினார். இன்று உலக சுகாதார சம்மேளனத்தின் பிராந்திய இயக்குநராகப் பணியாற்றும் டாக்டர் ஹேரத் குணரட்னாவை திருப்திப்படுத்துவது என்பது பகீரதப்பிரயத்தனம் தான் என்பதை அவரோடு பழகியவர்கள் அறிவர்.

1958ல் நான் தெல்லிப்பழைக்கு வராவிட்டாலும், இந்தச் சாதனையின் சூத்திரதாரி அதன் ஒழுங்குகளுக்குப் பொறுப்பாயிருந்த திரு. கதிரவேலுதான் என்பதை நான் உணர்ந்துகொண்டேன். சுகாதார விழா நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல், பொதுமக்களையும் கல்லூரி மாணவ மாணவிகளையும் அவற்றோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தப்படுத்தியமை, சுகாதாரக் கல்வி அளித்தமை, சுகாதாரக் கண்காட்சிகள்-கலை நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தமை. பிரமாண்டமான சிறப்பு மலர் வெளியிட்டு அதற்கான விளம்பரங்களையும் கட்டுரைகளையும் தேடியமை. பல ஆங்கில மருத்துவக் கட்டுரைகளை தமிழில் தானே மொழிபெயர்த்தமை போன்ற பல பணிகளை ஆரவாரமில்லாது அமைதியாகச் செய்து முடித்தவர் திரு. கதிரவேலு. விழா முடிந்ததும், அது பற்றிய அறிக்கையை அழகான ஆங்கிலத்தில், திறமையான கடதாசியில் தட்டச்சுச் செய்து படங்கள் - பிரசுரங்கள் சிறப்பிதழ் சகிதம் ஒரு புத்தகமாக அவர் கட்டி எடுக்கும் திறமையே அலாதி. அவருடைய இந்த அறிக்கைகள் கலாநிதிப் பட்ட வேட்பாளர்கள் தயாரிக்கும் ஆய்வுக் கட்டுரைகள் போலிருக்கும்.

ஒவ்வொரு ஆண்டும் தெல்லிப்பழைக்கே மைக்கல் குணரட்னா போட்டிக் கேடயத்தை கொடுக்க முடியாது என்ற ஒரு காரணம்தான் 1958 ஐ அடுத்தடுத்த ஆண்டுகளிலும் தெல்லிப்பழை முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தடையாய் இருந்தது என்பதே எனது கருத்து.

தெல்லிப்பழையில் நான் கடமை ஆற்றியபோது திரு. கதிரவேலு பற்றிய இன்னொரு உண்மையை பிறர் வாயிலாக அறிந்தேன். "ஈழகேசரி" - பொன்னையா காலத்து எழுத்தாளர் அவர் என்பதையும், அக் காலத்தில் மக்கள் மத்தியில் சுகாதார - மருத்துவ அறிவைப் பரப்பும் கட்டுரைகளை பெருவாரியாக எழுதியவர் அவர் என்றும் அறிந்தேன்.

தெல்லிப்பழையில் நான் கடமையாற்றிய போது, திரு. கதிரவேலுவின் மகன் இந்திரகுமார் யாழ். இந்துக்கல்லூரியில் திறமைமிக்க ஒரு மாணவனாக விளங்கியமையும், அவரை ஒரு டாக்டராக்கும் வேட்கை தந்தைக்கு இருந்ததையும் நான் அறிவேன்.

திரு. கதிரவேலுவும் நானும் இடமாற்றலாகி கொழும்பில் வெவ்வேறு பிரிவுகளுக்குச் சென்ற பின்னரும் எமது நட்பு தொடர்ந்தது. திரு. கதிரவேலு கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தில் டாக்டர் மகாதேவாவின் கீழ் பணியாற்றினார். இக் காலகட்டத்தில் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் பொதுமக்களுக்கென வெளியிட்ட சகல நூல்களையும் திரு. கதிரவேலு அவர்களே தமிழில் ஆக்கம் செய்தார்.

திரு. கதிரவேலு எங்கெல்லாம் வேலை செய்தாரோ, அங்கெல்லாம் அவரது மேலதிகாரிகள் அவருக்கு இடமாற்றல் நேரம் வந்தபோது, அவரின் சேவைகளை விடுவிக்க முடியாது என்று சுகாதார சேவை தலைமைக் காரியாலயத்துடன் போராடி, அவரைக் கூடிய காலம் தம்முடன் வைத்துக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது மகன் மருத்துவக் கல்லூரிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதும் திரு. கதிரவேலு அடைந்த மகிழ்ச்சியை நான் அறிவேன்.

தந்தையின் மேலதிகாரியாக கடமையாற்றிய நான் டாக்டர் இந்திரகுமாரின் நண்பராகப் பழகினேன். இந்திரகுமார் ஒரு டாக்டராக இருப்பது அவரது சிறப்புக்களில் ஒரு சிறிய அம்சமே ஆகும். அவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தமிழ்-ஆங்கில விவாதக் குழுக்களின் தலைவராக இருந்தார். பல்கலைக்கழக வேலை நிறுத்தப் போராட்டங்களின் தலைவராக இருந்தார். இப்பிரச்சினைகள் பற்றி ஆராய அரசு நியமித்த ஆணைக்குழுக்களின் முன் சாட்சியமளிக்க கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சார்பில் மாணவர் சங்கத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆங்கிலம்-தமிழ் இரு மொழிகளிலும் நாடறிந்த எழுத்தாளர்-நூலாசிரியர். சாகித்திய மண்டலப் பரிசு பெற்றார். சிறந்த ஒலிபரப்பாளர். சோவியத் அரசின் அழைப்பின் பேரில் அந் நாட்டிற்கு சென்று வந்தவர். சினிமாவில் கதாநாயகனாக நடித்தவர். இப்படியாக டாக்டர் இந்திரகுமாரின் திறமைகளை, சாதனைகளை அடுக்கிக்கொண்டே போகலாம்.

"தந்தை மகற்காற்றும் நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

டாக்டர் இந்திரகுமாரை ஒரு பல்துறை வித்தகனான ஒரு முழு மனிதனாக ஆக்குவதற்கு வேண்டிய பின்னணியை, மனப்பக்குவத்தை இலைமறைகாயாக இருந்து அவருக்கு அளிப்பதற்கு தன்னை அர்ப்பணித்துக்கொண்டவர் அமரர் கதிரவேலு என்றால் அது மிகையாகாது.

டாக்டர் இந்திரகுமார் தனது தந்தையின் மரண அறிவித்தலை பத்திரிகைக்கு வெளியிட்ட போது தனது தந்தையை "டாக்டர் இந்திரகுமாரின் தந்தை நண்பன் - தத்துவஞானி - வழிகாட்டி" என்று குறிப்பிட்டது எனது கருத்தை வலியுறுத்துகிறது.

எனக்குக் கீழ் பணியாற்றிய திரு. கதிரவேலு மறைந்துவிட்டார். ஆனால் அவரது தியாகங்களின் விஸ்வரூபத்தை அவரது வாரிசான டாக்டர் இந்திரகுமாரின் (எனது நண்பரின்) எதிர்கால சாதனைகளின் வாயிலாக நாம் காணலாம் என்ற உறுதியான நம்பிக்கையில் அமைதி காண்போம்.

டாக்டர் ஜே. சி. துரைசிங்கம்
முன்னாள் சுகாதார வைத்திய அதிகாரி,
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறவிப் பயனை நான் அடைந்தேன்

1982 டிசம்பர் 17.

எனது தந்தையின் மீது டாக்டர் P. R. அந்தனிஸ் அறுவைச் சிகிச்சை செய்ய நியமித்த நாள்!

அறுவைச் சிகிச்சையை தாங்கக் கூடிய சக்தி நோய்வாய்ப்பட்ட என் தந்தைக்கு உண்டா இல்லையா என்ற ஐயத்தின் மத்தியில், வேறு வழி எதுவுமே இல்லை என்றதன் காரணமாக டாக்டர் அந்தனிஸ் என் சம்மதத்துடன் எடுத்த முடிவு!

என் மனதில் ஒரே பூகம்பம்!

இந்த அறுவைச் சிகிச்சையில் அகிலம் புகழ் டாக்டர் அந்தனிஸிற்கு உதவியாளனாக நானே பங்குபற்ற வேண்டும் என்ற பயங்கர வெறி!

சுலைமான் தனியார் ஆஸ்பத்திரியில் சிற்றூழியர், தாதிகள் முதல் டாக்டர்கள் வரை என்னைத் தடுத்தனர். முட்டாள்த்தனமாக நடக்கவேண்டாம் என்று ஆலோசனை கூறினர். மருத்துவ சம்பிரதாயங்களுக்கு இது முரணானது என்று விளக்கினர். என்னால் இதைத் தாங்கமுடியாது என்று இரங்கினர்.

பூகம்பம் ஓயவில்லை! வெறி தனியவில்லை!

அறுவைச் சிகிச்சைக்கு முதல்நாள் மாலை டாக்டர் அந்தனிஸ் வந்தார். தனியாக அவருடன் பேசினேன். நானே அவருக்கு உதவியாளனாக வேண்டும் என்றேன். ஏனென்றார். காரணம் சில சொன்னேன். கேட்டார் சிந்தித்தார். "சரி நீயே செய்", என்று தோளில் தட்டிக் கொடுத்தார்.

ஆஸ்பத்திரியில் அனைவருக்கும் அதிர்ச்சி ! அவர்களால் நம்ப முடியவில்லை!!

ஒரு ஒதுக்குப்புறமாக நான் சென்றேன். அழுதேன். அழுதேன். கொட்டவேண்டிய கண்ணீரை எல்லாம் கொட்டித் தீர்த்தேன். ஏன்? கவலையா? களிப்பா? எனக்கே தெரியாது!

அறுவைச் சிகிச்சைக்கு இன்னும் 20 மணிநேரம். தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட கைதி தன் இறுதி 20 மணி நேரத்தை கழிப்பது போன்ற பிரமை.

அந்த நேரமும் வந்தது.
டாக்டர் அந்தனிஸ் உடன், அந்த அறுவைக் கூடத்தினுள் புகுந்தேன்.

அந்தப் பெரிய மனிதனுடன், அந்த அறுவைக் கூடத்தினுள்ளே, அவருக்கு உதவியாளனாக நூற்றுக்கணக்கான ஆபரேஷன்களில் நான் பங்குபற்றியிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் பேச நான் பதிலளிக்க, நான் பேச அவர் பதிலளிக்க, ஆனால் அனைவருமே கடமையில் கண்ணாயிருக்க, எத்தனையோ நோயாளிகளின் பிணியை வெட்டி வீசியிருக்கிறோம். கலகலப்பின் மத்தியில் சாதனை புரிந்திருக்கிறோம்.

அந்தப் பெரிய மனிதனின் சிறப்பியல்புகளை நான் அறிந்து ஆராதிக்க என்னைப் புரிந்து அவர் மதிப்புத்தர குரு - சிஷ்ய ரீதியில் உருவான உறவுகள், பிணைப்புகள் ஜனிக்க, தழைத்தோங்க வழிவகுத்தது அந்த அறுவைக்களம் தான். அந்தக் களத்தில் சொட்டும் குருதியின் மத்தியில் மேற்கொண்ட அந்தச் சம்பாஷனைகள் தான்.

ஆனால் இன்றோ?

மயான அமைதியின் நடுவே, அந்தப் பெரிய மனிதன் வெட்ட, நான் துணைபுரிந்தேன். அந்த உரத்த மௌனத்தின் ஓங்கார ஓலம் என் செவிப்பறைகளில் பட்டு அலை அலையாக அதிர்ந்து வெளிப்பட, தன்னியக்கத்தால் செயற்படும் இயந்திர மனிதன்போல் நான் செயற்பட்டேன்.

"பிணியுற்ற உறுப்பை எனக்குச் சுட்டிக்காட்டி. எனது தந்தை என்றால் நான் இப்படித்தான் அறுத்துத் தைப்பேன். உன் எண்ணம் என்ன?"

என்று அந்தப் பெரிய மனிதன், தனது கால்தூசி கூடப் பெறாத என்னை ஆலோசனை கேட்டபோது, நான் சொன்னேன், எனது உயிரனைய தந்தையின் எதிர்காலத்தை உங்கள் காக்கும் கரங்களில் ஒப்படைத்து விட்டேன் என்று.

மயான அமைதி தொடர்ந்தது.
அறுவையும், தையலும் தொடர்ந்தன.

எந்த உடலின் உயிரணுவிலிருந்து இந்திரகுமார் ஜனித்தானோ, அதே உடலின் உறுப்புக்களை கத்தியால் கூறுபோட்டு, அந்த உடலின் உள்ளே தனது இரு கரங்களைச் செலுத்தி, தனது குரு வெட்டித்தைக்க, அதற்கு உதவியாக அனுசரணையாக இருந்தான்.

எந்தத் தொழிலிற்குத் தன் மகனைக் கொண்டுவர வேண்டும் என்று அவன் தந்தை தன் ஆயுளைத் தியாகம் செய்தாரோ, அதே தொழிலை, அதே வித்தையை, அதே சேவையை, தனயன் தகப்பனது உயிர்காக்க ஆற்றும் கிடைத்தற்கரிய வாய்ப்பு, உயிர் காக்கும் வேள்வி அந்தத் தனயனுக்கு குருவின் வாயிலாக, அந்தப் பெரிய மனிதனின் நல்ல மனத்தினூடாகக் கிடைத்தது.

பிறவிப் பயனை நான் அடைந்தேன்!

496, காங்கேசன்துறை வீதி, க. இந்திரகுமார்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "THE YOUNG HINDU"
# &
# THE LATE KATHIRAVELOE

The history of "The Young Hindu", published by the students of Jaffna Hindu College, is indivisible with the name of Mr. Kathiraveloe. He was the Founder - Editor of "The Young Hindu". The name of the magazine itself was coined by him.

The silver Jubilee number of "The Young Hindu" was published in 1962. It carried in detail the historical aspects of "The Young Hindu".

We republish below, from the Silver Jubilee Number, an article written by Mr. Kathiraveloe and the First Editorial he wrote for "The Young Hindu" on July 21, 1937.

## OUR FOUNDER - EDITOR RECOLLECTS

The date on which a school magazine sees light of day is as important as the date of birth of any of us. The year 1937, the year in which "The Yung Hindu" was first edited and published by me, deserves to be written in letters of gold among the memorable dates in the history of the Jaffna Hindu College.

Prior to the appearance of the magazine in print it appeared as a hand - written publication. A newspaper-stand was made use of for pasting articles written in the form of newspaper columns. This novel form of publication attracted the attention of the late Mr. A. Cumaraswamy, Principal, and the late Mr. V. Nagalingam, "Shakespeare" of the day. These two gentlemen wanted me to explain how and why I took upon this responsibility. I replied that I held myself responsible for this venture with the assistance given by S. P. Muthiah, a fellow student from my class, and with the moral support given by the Senior Lyceum-the Debating Society composed of the London Matriculation classes-primarily with a view of improving the standard of expression of the students and to chronicle the activities of the College in the field of study and sports.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The late Mr. V. Nagalingam, who was the Senior President of the Senior Lyceum, took up the matter at a meeting of the Lyceum and it was decided to publish a fortnightly magazine of sixteen pages and to recover ten cents for each copy of the magazine from all students above the First Form to defray the cost of publication. In the election of an Editor my name was proposed and the election was unanimous. Thus the magazine which appeared on the newspaper-stand up to then began to be printed as an Organ of the Senior Lyceum. Mr. V. M. Asaipillai, Vice-Principal, was nominated by the Principal to carry out overall supervision of all matters connected with the publication of the magazine.

In the selection of a name for the magazine, the Senior Lyceum proposed that the name which was originally coined by me for the newspaper-stand magazine. "The Young Hindu" be adopted and the Principal gave his approval and blessing. In this connection it must be mentioned that "The Hindu" was a journal of the O. B. A. of the Jaffna Hindu College which was published as an Annual Number at that time. It always carried master pieces of men of learning which were beyond the comprehension of average students and the articles which interested them were reports of sports activities and results of London Matriculation examinations.

Short stories, essays, quiz, cross-word puzzles, sports round-up, examination results etc., were some of the features of the magazine. Tamil articles were not published as a separate section and the Senior Lyceum did not appoint a Tamil Editor to be in charge of a Tamil Section. However, inspite of this handicap, I gave parity of status to Tamil along with English in the number of articles passed for publication. For the start 500 copies were printed and all of them were sold out. The standard of the magazine must have impressed the Senior Lyceum so much that I was elected Editor for the second and third year in succession except for a short period in 1938.

**- P. Kathiraveloe**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The First Editorial

### OURSELVES

"We are naturally proud and happy that this issue of the *"Young Hindu"* appears in print. It will not be out of place if we mention in this connection that the *Young Hindu* is conducted by the students of the College to reflect their views and news, and to promote their interests. We must admit that, as a rule, we find it difficult to express our thought in simple and clear language. English being a foreign language its vagaries cannot be easily mastered by us. The only way we can hope to acquire a precise and lucid prose style is by incessant practice. We do hope that our friends will give their wholehearted support to this venture and make it worthy of their college".

**- 21st uly 1937**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## We remember with gratitude.....

* Dr. P. R. Anthonis (Consultant Surgeon, Colombo)
  Dr. R. S. Thanabalasundrum (Consultant Physician, Colombo)
  Dr. S. Ramachandran (Consultant Physician, Colombo)
  Dr. S. Gnanasunderam (Consultant Anaesthetist, Colombo)
  Dr. (Mrs.) S. Gunawardena (Consultant Anaesthetist, Colombo)
  Dr. S. Sivakumaran (Consultant Physician, Colombo)
  Dr. A. Sivapalasunderam (Consultant Physician, Colombo)
  Dr. M. Haniffa (Consultant Haematologist, Colombo)
  Dr. (Mrs.) Corine de Zoysa (Granspass Nursing Home)
  Dr. (Mrs.) Yogi Ponnambalam (M.O. - Radiology - Colombo)

  The Board of Directors of the Grandpass
  Maternity & Nursing Home Ltd.

  The Nursing staff of the Surgical ward and the Operating Theatre.

- for going our of their way in the battle to save the life of the late Mr. P. Kathiraveloe.

* The members of the Communist Party of Sri Lanka, from the Politbureau down to the ordinary member and Mr. Sena Gunasekere (Private secretary to the late Dr. N. M. Perera), who braved their lives, in the face of the anarchy and massacre unleashed by the lumpens, in organising the funeral arrangements, the last rites and in being physically present at the Cemetry to bid adieu to the late Mr. Kathiraveloe.

* All relations and friends, who have assisted in various ways during the terminal illness of the late Mr. Kathiraveloe and in organising the 31st day functions.

**Dr. K. Indra Kumar**
**Mrs. S. Kathiraveloe**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org